# கல்வி அமைச்சின் வருடாந்த உள்ளக இடமாற்றக் கொள்கை (இணைந்த சேவைகள்)

1. இணைந்த சேவையில் அடங்கும்

   - அரச பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை (III/II/I தரம்)
   - இலங்கை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் (2/3 வகுப்பு)
   - அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை
   - இலங்கை அரச நூலகப் பொறுப்பாளர் சேவை

ஆகிய சேவைகளின் உத்தியோகத்தர்கள் மற்றும் எதிர்காலத்தில் இணைந்த சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படவுள்ள (இணைந்த சேவைகள் மற்றும் அதற்குச் சமமான) சேவைகளின் உத்தியோகத்தர்கள், பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரியர் கல்லூரிகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு மேற்கொள்ளப்படும்.

2. வருடாந்த உள்ளக இடமாற்றத்தின்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான கொள்கைகள்

   2.1. 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஒரே சேவை இடத்தில் சேவையாற்றியுள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்குட்படுவர்.

   2.2. விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித்தினமன்று தமது சேவை இடத்தில் தொடர்ச்சியாக ஒருவருடம் சேவையாற்றியிருப்பது உள்ளக இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கத் தகைமை கொண்டவராகும்.

   2.3. தமது கோரிக்கைக்கமைய கிடைக்கப்பெற்ற உள்ளக இடமாற்றக் கட்டளையை பின்னர் இரத்துச் செய்ய முடியாது.

   2.4. உள்ளக இடமாற்றம் அவ்வவ் சேவைகளுக்காகத் தனித்தனியாகக் கருத்திற் கொள்ளப்படும்.

   2.5. உள்ளக இடமாற்றத்தை வழங்கும்போது கல்வி அமைச்சின் சேவைக்காலத்திற்கமைய சிரேஷ்ட தொடருக்கமைய தேசிய பாடசாலை அல்லது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்.

   2.6. தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதற்கான சகல ஆண்டுகளிலும் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களுக்கமைய உத்தியோகத்தர்களின் சிரேஷ்ட தொடரில் அடுத்த ஆண்டில் உள்ளக இடமாற்றத்திற்கு விண்ணப்பம்கோரும் தினம் வரை காத்திருக்கும் பட்டியல் பேணப்படுவதுடன் ஆண்டின் நடுப்பகுதியில் உரிய தேசிய பாடசாலைகளில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பும் செயற்பாடுகள் இக் காத்திருக்கும் பட்டியலுக்கமைய மேற்கொள்ளப்படும்.

   2.7. உள்ளக இடமாற்றம் தொடர்பிலான தீர்மானங்களுக்கமைய தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற வாய்ப்புக் கிடைத்துள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்றம் இரத்துச் செய்யப்படும் பட்சத்தில் மீண்டும் வாய்ப்புக் கிடைப்பது காத்திருக்கும் பட்டியலில் அடுத்த சந்தர்ப்பத்திற்கு உரித்தான உத்தியோகத்தருக்காகவாகும்.

2.8. இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் உள்ளக இடமாற்றத்திற்காக அமுல்படுத்தும் திகதியாக அமைவது இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வருடாந்த இடமாற்றத்தை அமுல்படுத்தும் திகதியாகும்.

2.9. ஒரு தேசிய பாடசாலையில் 03 வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தருக்கு மேலும் இரண்டு வருடங்களுக்காக (அமைச்சில் மற்றும் அமைச்சிற்குரிய சேவை இடமொன்றில் 05 வருடங்கள் உயர்ந்த பட்சத்தின் அடிப்படையின் கீழ்) வேறு தேசிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடிவதுடன் அச் சேவைக்குரியதாக விண்ணப்பிக்கும் பாடசாலையின் வெற்றிடம் காணப்படும் பட்சத்தில் மாத்திரம் அதற்காக வாய்ப்பு வழங்க முடியும்.

2.10. தேசிய பாடசாலை ஒன்றில் 05 வருடங்கள் சேவையாற்றிய உத்தியோகத்தர் மீண்டும் தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படமாட்டாது.

2.11. தமது ஆரம்ப சேவைக்காலத்தில் இறுதியாக 10 ஆண்டுகள் தேசிய பாடசாலையில் சேவையாற்றியவருக்கு தேசிய பாடசாலைக்கு மீண்டும் விண்ணப்பிக்கும்போது ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பு வழங்கியதன் பின்னர் மாத்திரம் உரிய கோரிக்கை கருத்திற்கொள்ளப்படும்.

2.12. 58 வயதைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் அவர்கள் கோரிக்கை விடுக்கப்படாத பட்சத்தில் உள்ளக இடமாற்றத்திற்குட்படமாட்டார்கள்.

2.13. கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், தேசிய பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரியர் கல்லூரிகளுக்கிடையே உள்ளக இடமாற்றம் உயர்ந்த பட்சம் 10 ஆண்டுகள் வரை (இடமாற்றங்கள் 02 சந்தர்ப்பங்கள் அல்லது 03) மாத்திரம் மேற்கொள்ளப்படும்.